அவர்களுடைய புனித அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கருணையின் பிறப்பிடம், மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 237, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

237—

அரசு விழா

***47693—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, தில்லையாடியில், தியாகி தில்லையாடி வள்ளியம்மை நினைவு நாளை அரசு விழாவாக நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பூம்புகார் தொகுதியிலுள்ள தில்லையாடியில், தியாகி தில்லையாடி வள்ளியம்மை நினைவு நாளை அரசு விழாவாக அறிவிக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

2014 ஜூலை 23]

முற்பகல் 11–05

திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரம்பரியத்தையும், பண்பாட்டையும், தியாகிகளுக்குப் பெருமையும் சேர்க்கும் தியாகத்தின் திருவுருவமான மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்தியர்களின் உரிமைகளைப் பறிக்கும் சட்டம் மற்றும் நிற வெறிக்கு எதிராகவும் 1913 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் நாளன்று காந்தியடிகள் அவர்கள் நடத்திய சத்தியாகிரகப் போராட்டத்தில் தியாகி தில்லையாடி வள்ளியம்மை அவர்கள் தனது 15–வது வயதிலே தாயுடன் அப்போராட்டத்திலே கலந்து கொண்டு, சிறை சென்று 1914 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22 ஆம் நாள் வீர மரணம் அடைந்தார். அவரது நினைவைப் போற்றும்வகையில் தில்லையாடியில் நினைவு மண்டபம் கட்டப்பட்டு, ஊர் மக்களாலும், அவரது குடும்பத்தினராலும் ஆண்டுதோறும் நினைவு தினம் கடைபிடிக்கப்பட்டுவருகிறது. எனவே, இந்த விழாவை அரசு விழாவாகக் கொண்டாட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் செய்தி, மக்கள் தொடர்புத் துறையின் மூலமாக சென்னையில் தேசியத் தலைவர்கள் மற்றும் அறிஞர் பெருமக்களின் பிறந்த நாள் விழாக்கள் மற்றும் அண்ணல் காந்தியடிகள் நினைவு நாள் உள்ளிட்ட மொத்தம் 27 நிகழ்ச்சிகளில் அவர்களது திருவுருவச் சிலைக்கு அருகில் புகைப்படம் வைத்து, மலர் அலங்காரம் செய்து, மலர் தூவி மரியாதை செய்யப்படுகிறது. மாவட்டங்களில் தேசியத் தலைவர்கள் மற்றும் அறிஞர் பெருமக்களின் பிறந்த நாள் விழாக்கள் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் தீரன் சின்னமலை மற்றும் மருதுபாண்டியர் நினைவு நாள் நிகழ்ச்சிகள் உள்ளிட்ட 22 நிகழ்ச்சிகள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.*

தில்லையாடி வள்ளியம்மை நினைவாக தமிழக அரசால், நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், தில்லையாடியில்,

[2014 ஜூலை 23

தில்லையாடி வள்ளியம்மை நினைவகம் கட்டப்பட்டு, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறைமூலம் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. சென்னை, எழும்பூர், கோ–ஆப்டெக்ஸ் தலைமை அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் 600 ஆவது விற்பனை நிலையம் 1982 ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டது. இந்தச் சிறப்பு விற்பனை நிலையத்திற்கு வீரத் தமிழ் பெண்மணி தில்லையாடி வள்ளியம்மை அவர்களின் தியாகத்தை நினைவுகூறும் வகையில் தில்லையாடி வள்ளியம்மை மாளிகை என்று மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் பெயர் சூட்டப்பட்டு, அவரது திருக்கரங்களால் 27–10–1982 ஆம் ஆண்டு தொடங்கிவைக்கப்பட்டது. நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், தில்லையாடி கிராமத்திலுள்ள தில்லையாடி வள்ளியம்மை நினைவகத்தை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்க 2014–2015 ஆம் ஆண்டு செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தில்லையாடி வள்ளியம்மை நினைவு நாளை அரசு விழாவாகக் கொண்டாட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர், பெண்ணினத்திற்குப் பெருமை சேர்த்திருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி சொல்லி விடைபெறுகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 238, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*